# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாகஅலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி : ++91-044-2953 5806 /2953 5816 தொலைநகல் : ++91-044-2953 5893
மின்னஞ்சல் : tnerc@nic.in இணையதளம் : www.tnerc.gov.in

**நாள் : 15-11-2021**

## <u>செய்திக் குறிப்பு</u>

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சூரிய ஒளி மின்சாரப் பயன்பாட்டினை தமிழ்நாட்டில் ஊக்குவிக்கும் பொருட்டு பெரும் நடவடிக்கையாக , கீழ்க்கண்ட மூன்று வகைகளில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளையும், கட்டணங்களையும் நிர்ணயம் செய்துள்ளது.

1. வீட்டு மின் நுகர்வோர்களுக்கு கூரை மேல் மற்றும் நிலத்தில் அமைக்கப்படும் வகைகளுக்கான “நெட் மீட்டரிங்” (Net Metering) முறை.
2. தொழில் மற்றும் பிற நுகர்வோர்களுக்கு கூரை மேல் மற்றும் நிலத்தில் அமைக்கப்படும் வகைகளுக்கான – “நெட் பில்லிங்” (Net billing) (அல்லது) “நெட் பீட்–இன்” (Net feed-in) முறை.
3. உயர் அழுத்த மின்நுகர்வோர்கள் மற்றும் மின்உற்பத்தி செய்பவர்கள் – நிலத்தில் அமைக்கப்படும் வகைக்கான – “கிராஸ் மீட்டரிங்” (Gross Metering) முறை.

ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி அடிப்படை மற்றும் மின் கட்டண வீதப்பட்டியல் கீழ்க்கண்டவாறு:

| வகை | தகுதி | மின்அளவீட்டு முறை | | | மின் கட்டுமானத் தொகை | பீட்–இன் கட்டணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நெட் மீட்டரிங் | நெட் பில்லிங் | கிராஸ் மீட்டரிங் | | 0-10 கி.வா | 11-150 கி.வா | 151-999 கி.வா |
| வீட்டு முறை உபயோகம் தாழ்வழுத்த வகை | அனுமதிக்கப்பட்ட பளு வரை | ✓ | ✓ | × | 20% 10 கி.வா வரை<br>75% 10 கி.வா.மேல் | ரூ.3.61 | ரூ.3.37 | |
| வீட்டு உபயோகம் தவிர பிற உபயோகம்; தாழ்வழுத்த வகை | அனுமதிக்கப்பட்ட பளு வரை | × | ✓ | × | ரூ.1.27 யூனிட் வீதம் சூரிய ஒளி மூலம் தயாரிக்கப்பட்ட மொத்த யூனிட்டிற்கு (தாழ்வழுத்த வகை) | | | |
| 150 கி.வா. மேற்பட்ட நுகர்வோர்கள் (உயர் அழுத்த வகை) | 151-999 கி.வா. | × | ✓ | ✓ | ரூ.0.83 யூனிட் வீதம் சூரிய ஒளி மூலம் தயாரிக்கப்பட்ட மொத்த யூனிட்டிற்கு (உயர்அழுத்த வகை) கிராஸ் மீட்டரிங் அளவீடு முறையில் கட்டணம் இல்லை. | | | ரூ.3.10 |
| நுகர்வோர் அல்லாத பிற மின் உற்பத்தியாளர்கள் | 151-999 கி.வா. | × | × | ✓ | இல்லை | | | |

**<u>கணக்கீட்டு முறை:</u>**

**<u>நெட் மீட்டரிங் ( Net Metering):</u>**

- மின் கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் மின் கட்டமைப்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உபயோகிக்கப்படும் மின்சார யூனிட்டுகளில் கழிக்கப்படும். நிகர இறக்குமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகள் நடைமுறையில் உள்ள மின் கட்டணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும்.
- ஏற்றுமதி செய்யப்பட்ட மின் அளவு இறக்குமதி செய்யப்பட்ட மின் அளவை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில், நிகர ஏற்றுமதி மின் அளவு அடுத்த கணக்கீட்டில் வரவு வைக்கப்படும்.

**<u>நெட் பில்லிங் (அல்லது) நெட் பீட்–இன் ( Net Billing or Net Feed-in) :</u>**

- இறக்குமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் நடைமுறையில் உள்ள மின் கட்டண அடிப்படையில் கணக்கிடப்பட்டு கழிக்கப்படும். ஏற்றுமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட மேற்கண்ட அட்டவணையில் உள்ள பீட்–இன் கட்டண அடிப்படையில் வரவு வைக்கப்படும்.
- இறக்குமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகளின் பண மதிப்பிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகளின் பண மதிப்பு கழிக்கப்பட்டு, மீதமுள்ள செலுத்தப்பட வேண்டிய பண மதிப்பு கணக்கிடப்படும்.

**<u>கிராஸ் மீட்டரிங் (Gross Metering):</u>**

- சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின் யூனிட்டுகளையும் உரிமதாரருக்கு விற்பது கிராஸ் மீட்டரிங் முறையாகும். இந்த முறை பகிரப்பட்ட மின் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- ஏற்றுமதி செய்யப்படும் யூனிட்டுகளின் பண மதிப்பு மேற்கண்ட பீட்–இன் மின் கட்டணத்தின் அடிப்படையில் வரவு வைக்கப்படும்.

**<u>வீட்டு உபயோக மின் நுகர்வோர்களுக்கான நன்மைகள் :</u>**

- தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணை எண்.03/2019 ன்படி வழங்கப்பட்ட நெட் பீட் இன் முறையின் கீழ் உள்ள மின்நுகர்வோர்கள் நெட் மீட்டர் முறைக்கு மாற்றிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**<u>கிராஸ் மீட்டர் முறையின் நன்மைகள்:</u>**

- சொந்தமாக நிலம் வைத்திருக்கும் ( மின்நுகர்வோராக இருக்க வேண்டிய அவசியமில்லை) அனைவரும், கிராஸ் மீட்டரிங் முறையில் சூரிய ஒளி மின் நிலையத்தை அமைக்கலாம்.
- அனுமதிக்கப்பட்ட மின் பளு 151 கிலோ வாட்டிலிருந்து ஆரம்பிப்பதால் (அதிகபட்சமாக 999 கிலோ வாட் வரை) சிறிய அளவு நிலம் உள்ள பொது மக்களும், குறைந்த அளவு முதலீட்டுடன் சூரிய ஒளி மின் நிலையத்தை அமைக்கலாம்.
- மேற்படி சூரிய ஒளி நிலையத்தை அருகிலுள்ள உயர் அழுத்த மின்னூட்டியுடன் குறைந்த செலவுடன் இணைக்கலாம். இதற்கென தனியாக துணை மின் நிலையம் வரை மின் கடத்தியை நிறுவ தேவையில்லை.
- கிராஸ் மீட்டரிங் முறையானது விவசாய மின்னூட்டிகளுடன் இணைக்கும் விதத்தில் அமைக்கப்படும் பகிரப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- பகிரப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களால் மின் இழப்பு பெருமளவு குறையும். மின் அழுத்தம் மேம்படும்.

**<u>மின் சேமிப்பு அமைப்பின் நன்மைகள்:</u>**

- சூரிய ஒளி மின்சாரம் மூலம் மின்சார சேமிப்பு முறையையும் அதற்குண்டான முதலீடுகளையும் ஊக்குவிக்கும் விதமாக, மின் தேவை அதிகமாக உள்ள நேரங்களில் சேமித்த மின்சாரத்தை மின் கட்டமைப்புக்கு கொடுக்கும் நிகர்வில் அவற்றிற்கு அதிகப்படியான மின் கட்டணம் அளிப்பதை, ஆணையம் டைம் ஆப் டே (Time-of-Day) சலுகை மின் கட்டண வீதப்பட்டியல் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி மாலை 18:00 மணியிலிருந்து 21:00 மணிவரை உள்ள மின் தேவை அதிகமாக உள்ள நேரத்தில் மின் சேமிப்பிலிருந்து மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு 20% அதிகமாக கட்டணம் வழங்கப்படும்.
- மேற்கண்ட பொருள் தொடர்பாக, மேலும் விவரங்களுக்கு www.tnerc.gov.in என்ற இணைய தளத்தில் "Tariff Order" என்ற தலைப்பின் கீழ் Order No.8/2021 என்ற பகுதியில் பார்வையிடலாம்.

செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்